முருகப்பெருமான் துணை

**மகான் கலைக்கோட்டு முனிவர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**25.05.2023,** வியாழக்கிழமை

1. ஆசாபாசக் கடலில் வீழ்ந்து
   அடுத்தடுத்துப் பிறவித் தொடர்ந்து
   நேசம் போல வேடம் இட்டு
   நிலவுலகில் சுயநலமுற வாழும்
2. வாழுகின்ற மானிட வர்க்கமே
   வதையாகும் முன்னே தன்னை
   ஆளுகின்ற மாயை வழிகளை
   அகற்றிவிட்டு வெளிவர வழிகாட்டும்
3. வழிகாட்டும் ஞானிகளை வணங்கி
   வழிமொழிந்து தெளிவுபெறவே
   களங்கமற அறிவுரை ஆசியை
   கண்டுரைப்பேன் கலைக்கோட்டு முனிவர் யானும்
4. யானும் சோபகிருது விடைதிங்கள்
   உயர்வான லாப திகதி குருவாரம்

(சோபகிருது வருடம் வைகாசி மாதம் **11** ம் நாள், **25.05.2023,** வியாழக்கிழமை)

   ஞானம்பெற மக்களுக்கு உரைப்பேன்
   நம்பிக்கை வைத்து அரங்கமகான்

5. மகானின் அவதார நோக்கம்
   மார்க்கமுடன் அறிந்து வந்து
   வகைபட சன்மார்க்கம் ஏற்று
   வணங்கித் தொண்டர்களாகி
6. ஆகியே உயிர் கொலை நீக்கி
   ஆறுமுகக் கடவுளை வணங்கி
   அகிலம் பசிபிணி இடரகல
   அன்னதான சேவையை செய்து
7. செய்துமே தயவும் தருமமும்
   செப்பிடுவேன் தன்னை ஆள
   மெய்ப்பொருள் தனை உணர்ந்து
   மனிதனாகப் பிறவி கொண்ட

8. கொண்ட நோக்கம் அறிந்து
குறைகளை களைந்து வாழும்
தொண்டு மனப்பான்மை கூடி
தேசிகன் வழி ஞானம் அடைவர்

9. அடையவே இனி பிறவாமைக்கு
அறமும் உண்மையும் துணையென
மடைதிறந்த வெள்ளம் போல்தெளிவு
மகான் அரங்கனால் உண்டாகி

10. ஆகியே உலகோர் ஞானபலம்
அடைவதுடன் ஞானிகளாக
மிகைபட அவரவரும் தேறி
மேன்மைதனை மண்ணில் படைப்பர்

11. படைக்கவே அவதார ஞானி
பார்வைபட பலரும் தேறி
தடைகளை வென்று ஞானியாவர்
தாமுரைத்த அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—